பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# வழிகாட்டி

“நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்” (அல்குர்ஆன் 5:2)

இதழ் : 19 | துல்ஹஜ்- 1433 | ஒக்டோபர், 2012

## துல்ஹஜ் முதல் பத்து தினங்களின் மகிமை

துல்ஹஜ் மாதம் பிறை ஒன்று தொடக்கம் பிறை 10 (ஹஜ்ஜுப் பெருநாள்) வரையான நாட்கள் மிகச் சிறப்பும் மகிமையும் வாய்ந்தவையாகும். ஏனைய சிறப்புக்குரிய நாட்களின் மகிமை பற்றி அறிந்திருக்கும் அளவுக்கு அதிகம் பேர் இப்பத்து தினங்களின் மகிமை குறித்தும் கண்ணியம் குறித்தும் அறிந்திருப்பதில்லை. இப்பத்து நாட்களின் சிறப்புக் குறித்து நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிலாகித்துக் கூறியுள்ளார்கள்.

‘மனிதன் நற் செயல்கள் புரிவதற்கு அல்லாஹ் மிகவும் விரும்பும் நாட்கள் துல்ஹஜ் மாதத்தின் முந்திய பத்து தினங்களாகும்’ என நபியவர்கள் கூற, ‘அல்லாஹ்வின் பாதையில் மேற்கொள்ளப்படும் புனிதப் போரின் நிலை என்ன? ’ என ஸஹாபாக்கள் வினவினர். ‘ஆம், அல்லாஹ்வின் பாதையில் மேற்கொள்ளப்படும் புனிதப் போர், இக்குறித்த தினங்களில் மேற்கொள்ளப்படும் அமல்களுக்கு ஈடாகாது. ஆனால் யார் தன் உடலையும் செல்வத்தையும் புனிதப் போருக்காக அர்ப்பணித்து ஷஹீதாக்கப்படுகிறாரோ அவரைத் தவிர’ என்று கூறினார்கள் (ஸஹீஹுல் புஹாரி, பைஹகீ)

மேலும் நபியவர்கள் கூறினார்கள்: ‘துல்ஹஜ் மாதத்தின் முந்திய பத்து தினங்களும் மனிதன் நல் அமல்கள் புரிவதற்கு அல்லாஹ்விடத்தில் மிக மதிப்புள்ள, அல்லாஹ்வுக்கு அதிக விருப்பத்திற்குரிய நாட்களாக இருக்கின்றன. ஆகவே, அத்தினங்களில் ஏகத்துவக் கலிமாவை அதிகம் கூறுவதிலும் தக்பீர் சொல்வதிலும் இறைவனைப் புகழ்வதிலும் அதிகம் ஈடுபடுங்கள்’ (முஸ்னத் அஹ்மத்)

(தொடர் பக்.2)

## பெருநாள் தொழுகை அலிகார் மைதானத்தில்

நபியவர்களின் வழக்கமான நடைமுறையை செயற்படுத்தும் பொருட்டு, வழக்கமாக ஆற்றங்கரை மைதானத்தில் நடைபெற்று வந்த பெருநாள் தொழுகையை இன்ஷா அல்லாஹ் இம்முறை அலிகார் தேசிய பாடசாலை மைதானத்தில் பெருநாளன்று காலை 6.30 மணிக்கு நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவரும் முஸல்லாவுடன் வுழூ செய்த நிலையில் உரிய நேரத்திற்கு வந்து தொழுகையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

---

## கூட்டு உழ்ஹிய்யா வழங்கும் திட்டம்

ஏழேழு பேர் இணைந்து கூட்டு உழ்ஹிய்யா வழங்கும் நடைமுறையை ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் இன்ஷா அல்லாஹ் கடந்த வருடம் போன்று இவ்வருடமும் செயற்படுத்தவுள்ளது. ஆடு அல்லது மாடு ஒன்றை தனியாக வாங்கி உழ்ஹிய்யா கொடுக்கும் வாய்ப்பு வசதி இல்லாதவர்கள் இத்திட்டத்தில் இணைந்துகொள்வதன் மூலம் உழ்ஹிய்யா என்ற கடமையை தனித்தனியாக நிறைவேற்றிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஏழு பேர் சேர்ந்து உழ்ஹிய்யா கொடுக்கும் எண்ணம் பலருக்கு இருந்தாலும் பொருத்தமான நபர்களைக் கண்டுகொள்வது கடினம் என்பதனால் பலர் இக்கடமையை நிறைவேற்றாது விட்டுவிடுகின்றனர். இத்தகையோர் இத்திட்டத்தில் இணைந்துகொள்வதன் மூலம் தம் மீதுள்ள கடமையை நிறைவேற்றிட முடியும். ஒருபங்கின் பெறுமதி ரூ. 7000 (ஏழாயிரம்) என தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

எனவே இதில் இணைந்துகொள்ளும் ஆர்வமுள்ளவர்கள் முற்கூட்டியே பணத்தைச் செலுத்துமாறு வேண்டிக்கொள்கிறோம். ஆயினும் அத்தகையோர் துல்ஹஜ் முதல் பிறை கண்டதிலிருந்து உழ்ஹிய்யா கொடுக்கும் வரை முடி, நகம் போன்றவற்றை அகற்றக்கூடாது என்பதை கவனத்திற்கொள்ளவும். இத்திட்டம் தொடர்பாக பின்வரும் இலக்கங்களில் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். 077 8088030, 077 3535367, 071 8885550

வேறு எந்த தினங்களிலும் இல்லாத பல்வேறு சிறப்பம்சங்கள் இப்பத்து தினங்களிலும் அடங்கியிருப்பதனால்தான் இவை மிகுந்த முக்கியத்துவம் பெற்றவையாக அல்லாஹ்விடம் கருதப்படுகின்றன என இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஹஜ், உம்றா, அறபா நோன்பு, ஹஜ்ஜுப் பெருநாள், உழ்ஹிய்யா ஆகிய சிறப்பம்சங்களை உள்ளடக்கிய காலமாக இப்பத்து தினங்களும் காணப்படுகின்ற அதே வேளை, இப்பத்து தினங்களில் ஒரு தினத்தில்தான் அல்லாஹ்வின் மார்க்கமான இஸ்லாம் பூரணப்படுத்தப்பட்டதாக அல்லாஹ் பிரகடனம் செய்தான். ஒரு வருடத்திலுள்ள வேறு எந்த தினங்களிலும் இவை போன்ற பல்வேறுபட்ட அமல்களும் சிறப்பம்சங்களும் உள்ளடங்கியிருக்கவில்லை. அதனால்தான் அல்லாஹ்வின் பாதையில் மேற்கொள்ளப்படும் புனிதப் போர் கூட இத்தினங்களில் மேற்கொள்ளப்படும் அமல்களுக்கு ஈடாக அமையாது என்று நபிகளார் சிறப்பித்துக் கூறியுள்ளார்கள். எனவே, ஒவ்வொருவரும் இத்தினங்களில் அதிகமதிகம் அமல்களில் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும். இத்தினங்களில் புரியப்படும் அமல்களின் சிறப்புகளை நோக்குவோமாயின்,

### 1. ஹஜ், உம்றா :

பொருளாதார வசதியும் உடல் ஆரோக்கியமும் உள்ள அனைவரும் ஹஜ், உம்றா கடமைகளை நிறைவேற்றுவது கட்டாயக் கடமையாகும். அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான்: 'யார் அங்கு யாத்திரை செல்ல சக்தியுடையவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் மீது அல்லாஹ்வுக்காக அங்கு சென்று அல்லாஹ்வின் இல்லத்தை ஹஜ்ஜுசெய்வது கடமையாகும்' (3 : 97). மேலும் அல்லாஹ் கூறுகிறான்: 'ஹஜ்ஜையும் உம்றாவையும் நீங்கள் அல்லாஹ்வுக்காக நிறைவுசெய்து விடுங்கள்' (2:196)

ஹஜ், உம்றா கடமைகளை அல்லாஹ்வுக்காக என்ற தூய எண்ணத்தோடு நிறைவேற்றுவோருக்கு கிடைக்கும் நன்மைகள் குறித்து நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அதிகம் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'தாம்பத்திய உறவில் ஈடுபடாமலும் கெட்ட செயல்களைச் செய்யாமலும் யார் ஹஜ் கடமையை நிறைவேற்றுகிறாரோ அவர் தனது தாய் பெற்றெடுத்த நாளில் இருந்ததைப் போன்று (பாவங்களற்ற பாலகனாக) பாவங்களிலிருந்து நீங்கி வீடு திரும்புவார்' (ஸஹீஹுல் புஹாரி). மேலும் நபியவர்கள் கூறினார்கள்: 'அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவர்க்கத்தை தவிர வேறு கூலி இல்லை. ஒரு உம்றா அடுத்த உம்றாவுக்கு இடைப்பட்ட காலத்தில் நிகழும் பாவங்களுக்கு குற்றப்பரிகாரமாக அமையும்' (நஸாஈ, முஸ்னத் அஹ்மத்) நோய், முதுமை போன்ற தகுந்த காரணங்களின்றி ஹஜ், உம்றா கடமைகளை நிறைவேற்றாமலிருப்பது பெரும் பாவமாகும்.

### 2. அறபா தின நோன்பு

துல்ஹஜ் மாதத்தின் ஒன்பதாவது தினமாகிய அறபா தினம் அதிக சிறப்புகள் கொண்ட ஒரு தினமாகும். நபியவர்கள் கூறினார்கள்: 'அறபா தினத்தில் அல்லாஹ் நரகிலிருந்து அதிகமான மக்களை விடுதலை செய்வது போன்று வேறு எந்த தினத்திலும் விடுதலை செய்வதில்லை' (ஸஹீஹ் முஸ்லிம்).

எனவே, இத்தினத்தில் ஹஜ்ஜுக்குச் சென்றோரைத் தவிர ஏனையோர் நோன்பு நோற்பது வலியுறுத்தப்பட்ட ஒரு ஸுன்னத்தாகும். இதன் சிறப்புக் குறித்து நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: 'அறபா தின நோன்பு கடந்த வருடத்தில் நிகழ்ந்த பாவங்களுக்கும் அடுத்து வரும் வருடம் நிகழவிருக்கும் பாவங்களுக்கும் குற்றப்பரிகாரமாக அமையும் என அல்லாஹ்விடம் ஆதரவு வைக்கிறேன்' (ஸஹீஹ் முஸ்லிம்). ஒரு நாள் நோன்பு நோற்பதன் மூலமாக இரு வருட (சிறு) பாவங்கள் மன்னிக்கப்படும் எனில், இதை எந்தவொரு முஸ்லிமும் தவற விட்டுவிடக் கூடாது.

### 3. மார்க்கம் பூரணப்படுத்தப்பட்டமை

ஹிஜ்ரி 10ம் ஆண்டு துல்ஹஜ் மாதத்தின் ஒன்பதாவது தினமாகிய அறபா தினத்தில் நபியவர்களும் ஸஹாபாக்களும் ஹஜ்ஜுக்காக திரண்டிருந்த வேளைதான் அல்லாஹ் பின்வரும் வசனத்தை இறக்கி, இஸ்லாம் மார்க்கத்தைப் பூரணப்படுத்தி விட்டதாக பிரகடனப்படுத்தினான்.

'இன்றைய தினம் உங்களது மார்க்கத்தை உங்களுக்கு பூரணப்படுத்திவிட்டேன். எனது அருட்கொடையை உங்கள் மீது முழுமைப்படுத்தியும் விட்டேன். மேலும் உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக்கொண்டேன்' (5:3). மார்க்கம் முழுமைப்படுத்தப்பட்ட தினத்தை உள்ளடக்கியிருப்பதன் காரணமாகவும் துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்கள் சிறப்புப் பெறுகின்றன. இதனால்தான் யூத மதத் தலைவர்கள் பின்வருமாறு கூறுபவர்களாக இருந்தார்கள்: 'மார்க்கத்தை முழுமைப்படுத்திவிட்டதாகக் கூறும் இவ்வசனம் எங்கள் மீது இறங்கியிருந்தால் நாங்கள் அத்தினத்தை பெருநாளாக கொண்டாடியிருப்போம்'.

எனவே, துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்களின் சிறப்புகளை உணர்ந்து ஸுன்னத்தான வணக்கங்கள், அல்குர்ஆன் ஓதுதல், பாவமன்னிப்புக் கோருதல், திக்ர், ஸலவாத், ஸதகா போன்றவற்றில் அதிக ஆர்வம் செலுத்தி நபியவர்கள் குறிப்பிட்டது போன்று பன்மடங்கு நற்கூலிகளைப் பெற்றுக்கொள்வோமாக.


**வெளிநாட்டுப் பயணச் சீட்டுகளை குறைந்த விலையில் பெற...**

கட்டார், டுபாய், ஸஊதி அரேபியா, குவைத், இந்தியா போன்ற மற்றும் பல வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான பயணச் சீட்டுகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**ஹபீழ் டிகெடிங் ஏஜென்ட்**

568/1/9, முதலாம் மாடி, மருதானை, கொழும்பு 10

ஏறாவூரில் தொடர்பு கொள்ள : 077 8088030

## உழ்ஹிய்யா : முக்கியத்துவமும் சட்டதிட்டங்களும்

இஸ்லாம் வழங்கியுள்ள இரு பெருநாட்களில் ஹஜ்ஜுப் பெருநாளும் ஒன்றாகும். இத்தினத்தில் முஸ்லிம்கள் மேற்கொள்ளும் அமல்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான அமல் உழ்ஹிய்யாவாகும். அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகிறான்: '(நபியே) உமது இரட்சகனைத் தொழுது விட்டு அறுத்துப் பலியிடுவீராக'(108: 2)

நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: 'ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் மனிதர்கள் செய்யும் அமல்களில் உழ்ஹிய்யாவை விட அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான அமல் வேறொன்றுமில்லை. ஆகவே அதனை நீங்கள் மனமுவந்து வழங்குங்கள்' (திர்மிதி, இப்னு மாஜஹ், ஹாகிம்). நபியவர்கள் மதீனாவுக்கு வந்தபின் உழ்ஹிய்யா கடமையாக்கப்பட்டது. அன்றிலிருந்து அவர்கள் மரணிக்கும் வரை ஒவ்வொரு வருடமும் உழ்ஹிய்யா வழங்கி வந்தார்கள் என்பதை திர்மிதீ போன்ற மற்றும் பல ஹதீஸ் நூல்களில் காணமுடிகிறது.

பெரும் செல்வந்தர்கள் மாத்திரமே இக்கடமையை நிறைவேற்ற வேண்டும் என சமூகத்திலுள்ள அதிகமானவர்கள் நினைக்கிறார்கள். இது அவர்களின் பிழையான ஊகமாகும். உழ்ஹிய்யா பிராணியை வாங்கும் வசதியுள்ள அனைவரும் இக்கடமையை நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும். இதனால்தான் ஒட்டகம் அல்லது மாடு ஒன்றை தனியாக வாங்கும் வசதியற்றவர்கள் ஏழு பேர் இணைந்து மாட்டை அல்லது ஒட்டகத்தை வாங்கி உழ்ஹிய்யா வழங்குமாறு இஸ்லாம் வழிகாட்டுகிறது. அந்த ஏழு பேர் குடும்ப உறவினர்களாகவோ, நண்பர்களாகவோ இருக்கலாம். இவ்வாறு ஏழு பேர் இணையும் போது மாடு ஒன்றை வாங்குவதற்கு ஒவ்வொருவருக்கும் சிறிய தொகையொன்றே செலவாகும். இவ்வாறு நோக்கும் போது தொழில் புரிவோர், வியாபாரிகள் உட்பட மிக அதிகமானவர்கள் இக்கடமையை நிறைவேற்ற வேண்டிய கடமையை கொண்டிருக்கிறார்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை.

### வழங்கும் காலம்

துல்ஹஜ் பிறை 10ம் நாளான ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று பெருநாள் தொழுகையைத் தொழுததிலிருந்து பிறை 11, 12, மற்றும் 13ம் நாள் சூரியன் மறைவதற்கு முன்னர் வரை உழ்ஹிய்யாவை நிறைவேற்றலாம். நபியவர்கள் கூறினார்கள்: 'ஐயாமுத் தஷ்ரீகுடைய நாட்கள் (பிறை 11, 12, 13) அனைத்துமே அறுப்பதற்குரிய நாட்களாகும்' (முஸ்னத் அஹ்மத்)

ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைக்கு முன்பு உழ்ஹிய்யா பிராணியை அறுப்பதோ அல்லது கொடுப்பதோ கூடாது. அவ்வாறே பிறை 13ம் தினத்திற்குப் பின்னர் உழ்ஹிய்யா கொடுப்பதும் கூடாது. நபியவர்கள் கூறினார்கள்: 'ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைக்கு முன் உழ்ஹிய்யாப் பிராணியை அறுத்தவர் வேறு ஓர் ஆட்டை (உழ்ஹிய்யாவாக) அறுக்கவும். பெருநாள் தொழுகைக்கு முன் அறுக்காதவர் (பெருநாள் தொழுகைக்குப் பின்) அல்லாஹ்வின் பெயர் கூறி அறுக்கவும்' (புஹாரி, முஸ்லிம்)

### யார் ... யாருக்கு ...

வயது வந்த, உழ்ஹிய்யா கொடுக்கும் வசதியுள்ள ஒவ்வொருவரும் தனக்காகவும் தனது குடும்பத்திலுள்ளவர்களுக்காகவும் உழ்ஹிய்யா கொடுக்க வேண்டும். (முஸ்னத் அஹ்மத், இப்னு மாஜஹ், ஹாகிம்)

உழ்ஹிய்யா என்பது மரணித்தவர்களுக்காக கொடுக்கப்படுவது என்ற பிழையான கருத்து சமூகத்திலுள்ள பலரிடம் காணப்படுகிறது. அவ்வாறில்லை. உயிரோடுள்ளவர் தனக்காகவும் தனது குடும்பத்திலுள்ளவர்களுக்காகவும் இக்கடமையை நிறைவேற்றுவதாக நிய்யத் வைத்துக்கொள்ளும் போது குடும்பத்தில் மரணித்தவர்கள் இருந்தால் அவர்களும் அதில் உள்ளடங்குவார்கள். நபியவர்கள் உழ்ஹிய்யா வழங்கிய போது தனக்காகவும் தனது சமூகத்திலுள்ள உழ்ஹிய்யா கொடுக்கமுடியாதவர்களுக்கும் என குறிப்பிட்டே உழ்ஹிய்யா வழங்கினார்கள் (திர்மிதி, அபூதாவூத், முஸ்னத் அஹ்மத்).

உழ்ஹிய்யா வழங்குபவர் அறுக்கப்பட்ட உழ்ஹிய்யாப் பிராணியை உறவினருக்கும் வறியோருக்கும் வழங்குவதோடு தனக்காகவும் ஒரு பங்கை எடுத்துக்கொள்ள முடியும். அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகிறான்: 'அதிலிருந்து (உழ்ஹிய்யா பிராணியிலிருந்து) நீங்கள் உண்ணுங்கள். (தேவையுடையோராயிருந்தும் பிறரிடம்) கேட்காதவர்களுக்கும், இதை யாசித்து கேட்பவர்களுக்கும் உண்ணக்கொடுங்கள்' (22:36). மேலும் அல்லாஹ் கூறுகிறான்: 'ஆகவே அறுக்கப்பட்டவைகளில் இருந்து நீங்களும் புசியுங்கள், கஷ்டப்படும் ஏழைகளுக்கும் உண்ணக்கொடுங்கள்' (22:28)

### உழ்ஹிய்யாப் பிராணிகள்

உழ்ஹிய்யா கொடுக்கும் பிராணி ஆடு, மாடு (பசு, எருது மற்றும் எருமை), ஒட்டகம் ஆகிய பிராணிகளில் ஒன்றாகவே இருக்க வேண்டும். கொடுக்கப்படும் பிராணி ஆடாக இருந்தால் அதை ஒருவர் மாத்திரமே கொடுக்க முடியும். மாடாக அல்லது ஒட்டகமாக இருந்தால் அதை ஒருவரோ அல்லது ஏழு பேர் சேர்ந்தோ கொடுக்கலாம்.

'நாங்கள் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களுடன் ஹுதைபியா ஆண்டில் ஒட்டகத்தை ஏழு பேரும், மாட்டை ஏழு பேரும் சேர்ந்து உழ்ஹிய்யா கொடுத்தோம்' என ஜாபிர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் அறிவிக்கிறார்கள் (முஸ்லிம்).

ஏழு பேர் சேர்ந்து ஒரு மாட்டை வழங்கலாம் என்பதை பலர் தவறாகப் புரிந்துவைத்திருக்கின்றனர். ஒருவர் ஒரு மாட்டை வாங்கி, அதை தனது குடும்பத்திலுள்ள ஏழு பேருக்கு என்று நிய்யத் வைத்து அல்லது அந்த ஏழு பேர் சார்பாக கொடுக்க வேண்டும் என்று சிலர் விளங்கியிருக்கின்றனர். இது தவறாகும். ஒருவர் ஒரு மாட்டையோ, ஆட்டையோ வாங்கி, உழ்ஹிய்யா கொடுப்பதாயின் தனக்காகவும் தன் குடும்பத்திலுள்ள எத்தனை பேருக்காகவும் கொடுக்கலாம்.

இன்னும் சிலர் எவ்வாறு விளங்கியிருக்கிறார்கள் எனில், அறுக்கப்பட்ட இறைச்சியை ஏழு பேருக்கு மாத்திரமே கொடுக்க வேண்டும் என்பதாக விளங்கியிருக்கின்றனர். இதுவும் தவறாகும். எத்தனை பேருக்கு கொடுக்க முடியுமோ அத்தனை பேருக்கு கொடுக்கலாம். சரியான விளக்கம் என்னவெனில், ஒருவருக்கு ஒரு மாட்டை தனியாக வாங்குவதற்கு பொருளாதார வசதி இல்லையென்றால், அவர் தன்னோடு இன்னும் ஆறு பேரை இணைத்து மொத்தமாக ஏழு பேர் சேர்ந்து ஒரு மாட்டை வாங்கி அறுத்துப் பங்கிட்டு அந்த ஏழு பேரும் உழ்ஹிய்யா கொடுக்கலாம். அந்த ஏழு பேரும் தனக்காகவும் தன் குடும்பத்திலுள்ளவர்களுக்காகவும் என நிய்யத் வைத்து அந்த மாட்டை உழ்ஹிய்யா கொடுக்கும் போது ஏழு பேருக்கும் உழ்ஹிய்யா வழங்கிய நன்மை கிடைக்கும். எனவே, தனியாக ஒரு மாட்டை அல்லது ஒட்டகத்தை

வாங்குவதற்கு வசதியற்றவர்களுக்கு இஸ்லாம் வழங்கிய ஒரு சலுகைதான் இது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

நபிகளாரின் காலத்தில் ஒருவர் தனக்காகவும் தனது குடும்பத்திற்காகவும் ஓர் ஆட்டை உழ்ஹிய்யா கொடுத்ததோடு அவர்களும் அதை உண்டு பிறருக்கும் உண்ணக்கொடுப்பவர்களாக இருந்தார்கள் (திர்மிதி, இப்னு மாஜஹ்).

உழ்ஹிய்யாக் கொடுக்கப்படும் பிராணிகள் அங்கக் குறைபாடுடையவையாகவோ, மெலிந்தவைகளாகவோ இருக்கக் கூடாது. நான்கு வகைப் பிராணிகளை உழ்ஹிய்யாக் கொடுக்கக் கூடாது என நபியவர்கள் தடுத்திருக்கிறார்கள். அவையாவன: கண்பார்வை இழந்தவை, நோயுற்றவை, நொண்டியானவை, வயது முதிர்ந்து கூனிக் குறுகியவை (முஸ்னத் அஹ்மத்)

(உழ்ஹிய்யாப் பிராணிகளின்) கண், காது ஆகியவற்றைப் பரிசீலிக்குமாறும், கண்பார்வையற்ற, காதின் முன்பகுதி அல்லது பின்பகுதி துண்டிக்கப்பட்ட, காது முழுமையாக துண்டிக்கப்பட்ட, முன்பற்கள் விழுந்த பிராணிகளை உழ்ஹிய்யா கொடுக்க வேண்டாம் என நபியவர்கள் தடுத்தார்கள் (முஸ்னத் அஹ்மத், திர்மிதி)

வயது வந்தவற்றையே உழ்ஹிய்யா கொடுங்கள். சிரமமாக இருக்கும் பட்சத்தில் 6 மாதம் நிரம்பிய செம்மறி ஆட்டை உழ்ஹிய்யா கொடுங்கள் என நபியவர்கள் கூறினார்கள் (முஸ்லிம்)

எனவே, உழ்ஹிய்யா தொடர்பாக வரும் ஹதீஸ்களை வைத்து நோக்கும் போது, ஆடாக இருந்தால் ஒரு வருடம் பூர்த்தியானதாகவும், மாடாக இருந்தால் இரண்டு வருடங்கள் பூர்த்தியானதாகவும், ஒட்டகமாக இருந்தால் ஐந்து வருடங்கள் பூர்த்தியானதாகவும் இருக்க வேண்டும். செம்மறி ஆடாக இருந்தால் ஆறு மாதம் பூர்த்தியானதையும் கொடுக்கலாம்.

உழ்ஹிய்யா பிராணியின் எந்தவொரு பகுதியையும் அறுப்பவருக்கு கூலியாக கொடுக்கக் கூடாது என நபியவர்கள் கூறினார்கள் (புஹாரி, முஸ்லிம்). ஆயினும் கூலியைக் கொடுத்ததன் பின் மேலதிகமாக உழ்ஹிய்யா இறைச்சியை ஸதகா என்ற அடிப்படையில் அறுப்பவருக்கு கொடுப்பதில் தவறில்லை. உழ்ஹிய்யா இறைச்சியையே கூலியாக கொடுத்து விடுவதே கூடாது.

## உழ்ஹிய்யா கொடுப்பவர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள்

1. உழ்ஹிய்யா கொடுப்பவர் துல்ஹஜ் மாதம் பிறை ஒன்றில் இருந்து முடி, நகம் போன்றவற்றை உழ்ஹிய்யா கொடுக்கும் வரை அகற்றுவது கூடாது (முஸ்லிம்). ஆயினும் ஒருவர் உழ்ஹிய்யா கொடுப்பதற்கான வசதி இல்லாமலிருந்து ஹஜ்ஜுப் பெருநாளைக்கு இரு தினங்கள் அல்லது மூன்று தினங்களுக்கு முன்பே வசதியைப் பெற்றுக்கொள்வாரெனில் அவர் அதற்கு முந்திய தினங்களில் முடி, நகம் போன்றவற்றை அகற்றியதனால் குற்றமில்லை. அவர் உழ்ஹிய்யா கொடுக்க முடியும்.

2. உழ்ஹிய்யா கொடுப்பவரே பிராணியை அறுப்பது சிறந்தது. நபியவர்கள் தங்களது கரத்தினாலேயே உழ்ஹிய்யா பிராணியை அறுத்துள்ளார்கள் (புஹாரி, முஸ்லிம்)

3. அறுக்கும் கத்தியை நன்கு தீட்டி கூர்மையாக்கிக் கொள்ள வேண்டும் (முஸ்லிம்)

4. அறுக்கும் போது ''பிஸ்மில்லாஹி வல்லாஹுஅக்பர்'' என்று கூறிக்கொள்ள வேண்டும் (முஸ்லிம்)

5. பிராணிகளுக்கு முன்னிலையில் கத்தியைத் தீட்டுவதோ, ஒரு பிராணி பார்த்திருக்க மற்றப் பிராணியை அறுப்பதோ கூடாது (முஸ்னத் அஹ்மத், இப்னு மாஜஹ்)

6. அறுக்கும் போது கிப்லாவை முன்னோக்கியும் விரைவாகவும் அறுக்க வேண்டும் (அபூ தாவூத்)

**குறிப்பு 01 : மேலுள்ள ஒழுங்குகளோடு அறுக்கப்பட்ட பிராணியின் கழிவுகளை சிறந்த முறையில் அகற்றுவது அல்லது நாய் போன்ற பிராணிகள் தோண்டாதவாறு குழி தோண்டிப் புதைப்பது, அறுத்த இடத்தை நன்றாக சுத்தம் செய்வது ஆகியன கட்டாயமாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்குகளாகும். நல்ல முறையில் கழிவு இரத்தம், எலும்புகள் போன்றவற்றை சுத்தம் செய்யாமல் விட்டமையால் முற்காலங்களில் ஏனைய சமூகங்களின் கண்டனங்கள் நாட்டின் பல பகுதிகளில் வெளிப்பட்டதையும் அதன் மூலம் ஒட்டுமொத்த முஸ்லிம்களைப் பற்றிய தப்பபிப்பிராயம் ஏற்பட்டதையும் மறந்துவிடக் கூடாது. இஸ்லாம் சுத்தத்திற்கு மிக முக்கியமான இடத்தை வழங்கியுள்ளதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.**

**குறிப்பு 02 : மேலுள்ள ஒழுங்குகள், சட்ட திட்டங்கள் ஏனைய காலங்களிலும் கட்டாயமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். இன்று நமது பிரதேசத்திலிருக்கும் அதிகமான கோழி மற்றும் மாட்டு இறைச்சிக் கடைகள், மடுவம் போன்றவற்றில் இத்தகைய மார்க்க சட்ட திட்டங்கள் பேணப்படுவதாகத் தெரியவில்லை. எத்தனை பேர் கிப்லாவை முன்னோக்கி, அல்லாஹ்வின் பெயர் கூறி, ஏனைய பிராணிகள் பார்த்திருக்காதவாறு அறுக்கிறார்கள் என்பது மிகப் பெரும் கேள்விக்குறியாகும். கடைகளில் கோழி மற்றும் மாட்டு இறைச்சி வாங்குவோர் அவை ஹலாலான முறையில் அறுக்கப்பட்டவையா என்ற சந்தேகத்துடனேயே சாப்பிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.**

**மேலே கூறப்பட்ட சட்டதிட்டங்களை கடைப்பிடிக்காமல் கோழி, ஆடு, மாடு போன்றவற்றை அறுப்போரும் விற்பனை செய்வோருமே அவற்றை சாப்பிடுவோர் அனைவரினதும் பாவங்களைச் சுமக்க வேண்டும் என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும்.**

**அதே வேளை மார்க்கத்துக்கு முரணான வகையில் பிராணிகளை அறுத்து விற்பனைசெய்வோரை அடையாளம் கண்டு அவர்களிடம் தவறுகளை உடனுக்குடன் சுட்டிக்காட்ட வேண்டியதும் அதையும் மீறி செயற்படுவோரிடம் இறைச்சி வாங்காமல் தவிர்ந்துகொள்ள வேண்டியதும் ஏனைய அனைவரினதும் பொறுப்பாகும். அப்போதுதான் இத்தகைய பாவங்களையும் தவறுகளையும் இல்லாதொழிக்க முடியும். ஞானமும் வல்லமையும் நிறைந்த அல்லாஹ் நமது செயல்களை அங்கீகரிப்பானாக.**

# நபி வழியில் நம் தொழுகை

-ஹாபிழ் ARM. றிஸ்வான்-

- தொடர் 09

**(கடந்த இதழில் இஃதிதால், ஸுஜூத் ஆகிய நிலைகளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் பற்றி கலந்துரையாடப்பட்டது)**

கடந்த இதழில் கூறப்பட்டவாறு, ஸுஜூத் செய்யும் முறைபற்றி ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டவற்றை தொகுத்துநோக்கினால், பின்வரும் விதமாக நமது ஸுஜூத் அமைந்திருக்க வேண்டும் :

- நெற்றி, மூக்கு, இரு உள்ளங்கைகள், இரு முழங்கால்கள், இரு பாதங்களினதும் விரல் நுனிகள் ஆகிய அனைத்து உறுப்புகளும் நிலத்தில் படுதல்.
- இரு கை விரல்களையும் பொத்தாமல் விரித்து கிப்லாவை முன்னோக்கி வைத்தல்.
- இரு கைகளையும் நிலத்தில் வைக்கும் போது இரு தோள்புயங்களுக்கு நேராக அல்லது காதுகளுக்கு நேராக வைத்தல்.
- மேலும் இரு கைகளையும் விலாக்களோடு அணைக்காமலும் முழங்கால்களோடு சேர்க்காமலும் சற்று விலக்கிவைத்தல்.
- இரு பாதங்களையும் ஒன்றோடொன்று சேர்த்து வைத்தல்.
- இரு கால் விரல்களையும் மடக்கி கிப்லாவை முன்னோக்கி வைத்தல்



நாம் செய்கின்ற ஒவ்வொரு ஸுஜூதின் போதும் மேலுள்ள அனைத்து முறைகளையும் கடைப்பிடிக்கும் போதுதான் அந்த ஸுஜூத் நபிகளார் செய்த ஸுஜூதாக அமைவதோடு, அல்லாஹ்வினால் அது ஏற்றுக்கொள்ளப்படும். இல்லையேல் நமது தொழுகை அல்லாஹ்வினால் நிராகரிக்கப்பட்டு விடும்.

மேற்கூறப்பட்ட முறைகளுக்கு மாறாக,

ஸுஜூத் செய்யும் போது கைகளை நிலத்தில் படுக்க வைத்தல், முழங்கைகளை தொடையோடு சேர்த்து வைத்தல், கால்களை வயிற்றுடன் சேர்த்து வைத்தல், இரு பாதங்களையும் ஒன்றோடொன்று சேர்க்காமல் பிரித்து வைத்தல், கால் விரல்களை மடக்காமல் வைத்தல், மூக்கை நிலத்தில் படாமல் வைத்தல், ஸுஜூதுக்குச் செல்லும் போது தலைமுடியையோ ஆடைகளையோ கைகளால் கூட்டிப் பிடித்தல் ஆகிய அனைத்தும் பிழையானவையும் நபிகளாரின் முறைக்கு முரணானவையுமாகும்.

- பின்வரும் துஆக்கள், திக்ருகளை ஸுஜூதில் ஓதுவார்கள்:

سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى

سُبُّوحٌ قُدُّوسٌ رَبُّ الْمَلاَئِكَةِ وَالرُّوحِ

سُبْحَانَكَ اللَّهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ

اللَّهُمَّ اغْفِرْ لِي

**14) நடு இருப்பும் அதில் தாமதித்தலும்**

- பின்னர் நபியவர்கள் அல்லாஹுஅக்பர் என்று தக்பீர் சொன்னவர்களாக ஸுஜூதிலிருந்து தலையை உயர்த்துவார்கள் (புஹாரி, முஸ்லிம்). பின்னர் நடு இருப்பில் அமர்வார்கள்.

- நபியவர்கள் இரண்டு முறைகளில் அமர்வார்கள் :

I- இடது பாதத்தை விரித்து அதன் மீது அமர்வார்கள். வலது காலை நேராக நட்டி வைப்பார்கள். வலது கால் விரல்களை (மடக்கி) கிப்லாவை முன்னோக்கி வைப்பார்கள் (புஹாரி, நஸாஈ, பைஹகீ)

II- சில நேரங்களில் தமது இரு குதிகால்களின் மீது உட்கார்வார்கள். (இவ்வாறு இருக்கும் போது இரு கால் விரல்களையும் மடக்கி கிப்லாவை முன்னோக்கி வைப்பார்கள்) (முஸ்லிம்)

* இவ்விரு இருப்புகளைத் தவிர வேறு முறைகளில் அமர்வது பிழையான முறைகளாகும்.

- இவ்விருப்பில் நபியவர்கள் ஸுஜூதில் தாமதித்திருப்பது போன்ற அளவுக்கு தாமதிப்பார்கள். (புஹாரி, முஸ்லிம்)

- இவ்விருப்பில் நபியவர்கள் பின்வரும் துஆக்களை ஓதுவார்கள்.

رَبِّ اغْفِرْ لِي رَبِّ اغْفِرْ لِي

، رَبِّ اغْفِرْ لِي ، وَارْحَمْنِي ، وَاجْبُرْنِي

وَارْفَعْنِي ، وَارْزُقْنِي وَاهْدِنِي

**15) இரண்டாவது ஸுஜூதும் அதில் தாமதித்தலும்**

- நடு இருப்பிலிருந்து அல்லாஹுஅக்பர் என்று சொன்னவர்களாக நபியவர்கள் இரண்டாவது ஸுஜூதை நிறைவேற்றுவார்கள் (புஹாரி, முஸ்லிம்).

**16) ஆறுதல் பெறும் இருப்பு**

- இரண்டாவது ஸுஜூதிலிருந்து அல்லாஹுஅக்பர் என்று சொன்னவர்களாக எழுந்து (நடு இருப்பில் அமர்வது போன்று) அமர்வார்கள். உடல் உறுப்புகள் அனைத்தும் ஆறுதல் பெறும் அளவுக்கு ஒரு சொற்ப நேரம் இவ்விருப்பில் தாமதிப்பார்கள் (புஹாரி, அபூதாவூத்)

- பின்னர் இரு கைகளையும் நிலத்தில் ஊன்றியவர்களாக இரண்டாவது றக்அத்துக்கு எழுவார்கள்.

* இவ்வாறு சொற்ப நேரம் உட்காராமல் இரண்டாவது ஸுஜூதிலிருந்தவாறே இரண்டாவது றக்அத்துக்கு எழுவது, அல்லது இவ்வாறு அமர்ந்து விட்டு கைகளை நிலத்தில் ஊன்றாமல் தொடைகளில் ஊன்றி எழுவது, அல்லது நீண்ட நேரம் இவ்விருப்பில் தாமதிப்பது ஆகியவை நபிகளாரின் வழி முறைக்கு முரணானவை.

- இன்ஷா அல்லாஹ் தொடரும் -

# நபிகளார் பலதார மணம் புரிந்தது ஏன்?

அல்லாஹ்வின் உத்தரவின்பேரில், நபிகளார் அவர்கள் பலதாரமணம் புரிந்தமைக்கான காரணிகள் பற்றி அறியாமல், இஸ்லாத்தின் விரோதிகள் திரைப்படங்கள், கட்டுரைகள் மூலமாக நபியவர்களை மோசமாக சித்தரித்துவரும் இக்காலகட்டத்தில், அந்நபியை உயிராக மதிக்கும் முஸ்லிம்கள், நபிகளார் பலதார மணம் புரிந்தமைக்கான காரணிகளையும், பின்னணிகளையும் அறிந்திருக்கவேண்டியது அவசியமாகும்.

நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் நல்ல உடல் வலிமையும் திடகாத்திரமும் கொண்ட வாலிபக் காலத்தில் தன்னை விட 15 வயது அதிகமான கதீஜா றழியல்லாஹுஅன்ஹா அவர்களை மணம் முடித்து அவர்களுடன் ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் வாழ்ந்தார்கள். அன்னை கதீஜா அவர்கள் மரணமடைந்த பின்பே ஸவ்தா றழியல்லாஹுஅன்ஹா அவர்களை மணம் முடித்தார்கள். இவர்களும் வயதில் நபியவர்களை விட மூத்தவராகவே இருந்தார்கள். அதற்குப் பின் தனது வயோதிப காலத்தில்தான் பல திருமணங்களைச் செய்தார்கள். இதை நன்கு சிந்திப்பவர் நபியவர்கள் பல திருமணங்களை செய்தது தனது ஆசையைத் தீர்த்துக்கொள்வதற்காகத்தான் என்று கூறவே மாட்டார். மாறாக நபியவர்கள் பலதார மணம் புரிந்ததற்கு பல உயர்ந்த உன்னத நோக்கங்கள் இருந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

அரேபியர் தமது வழக்கப்படி மாமனார் வீட்டு உறவை பெரிதும் மதிப்பவர்களாக இருந்தனர். இவ்வுறவு பல மாறுபட்ட குடும்பங்களுக்கிடையே நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கான வழிகளில் ஒன்றாக இருந்தது. மாமனார் வீட்டு உறவினர்களுடன் சண்டையிடுவதையும் போர் புரிவதையும் பெரும் அவமானமாக கருதினர். இப் பின்னணியின் அடிப்படையில் நபிகளார் பல்வேறுபட்ட வம்சங்களைச் சேர்ந்த பெண்களைத் திருமணம் செய்ததன் மூலம் அந்த வம்சங்களுக்கிடையே நீண்ட காலமாக நிலவி வந்த ஓயாத சண்டையையும் பகையையும் தணிக்க முயற்சித்தார்கள். நபிகளாரின் முயற்சி மிகப் பெரும் பலனைத் தேடித் தந்தது.

எடுத்துக்காட்டாக, நபியவர்கள் திருமணம் முடித்த உம்மு ஸலமா றழியல்லாஹுஅன்ஹா அவர்கள் மக்ஸூம் கோத்திரத்தைச் சேர்ந்தவர். நபியவர்களை மூர்க்கத்தனமாக எதிர்த்து வந்த காலித் இப்னு வலீத் இக்கோத்திரத்தைச் சேர்ந்தவர்தான். நபியவர்களைப் பல போர்களில் எதிர்த்து வந்த இவர் தனது கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை நபிகளார் மணம் முடித்துக்கொண்டதால் தனது எதிர்ப்பைக் கைவிட்டு குறுகிய காலத்திற்குள் நபியவர்களிடம் வந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

இவ்வாறே நபியவர்கள் உம்மு ஹபீபா அவர்களைத் திருமணம் செய்தார்கள். இவர் அபூஸுப்யானின் மகளாவார். அபூஸுப்யான் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் செய்த கொடுமைகள் ஏராளம். உம்மு ஹபீபா றழியல்லாஹுஅன்ஹா அவர்களை நபியவர்கள் திருமணம் செய்த பின் அபூஸுப்யான் தனது மருமகனான நபிகளாரை எதிர்க்க வேண்டி வரும் என்பதை உணர்ந்து தனது தீய செயல்களிலிருந்து சற்றே பின்வாங்கினார். காலப் போக்கில் மிகவும் மனம் திருந்திய அபூஸுப்யான் மக்கா வெற்றிகொள்ளப்பட்ட ஆண்டில் நபியவர்களிடம் வந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

இதுபோலவே பனூநழீர் மற்றும் பனூமுஸ்தலக் ஆகிய இரு கோத்திரத்தாரும் நபியவர்களை கடுமையாக எதிர்த்து வந்த யூத கோத்திரத்தவர்களாவர். இவ்விரு யூத கோத்திரத்தாரையும் சேர்ந்த ஸபிய்யா மற்றும் ஜுவைரியா ஆகிய இரு பெண்களையும் நபிகளார் திருமணம் புரிந்ததன் மூலம் இவ்விரு கோத்திரத்தாரும் நபியவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் பகிரங்கமாக வெளிப்படுத்தி வந்த பகைமையை முற்றாக நிறுத்திக்கொண்டனர். நபியவர்கள் ஜுவைரியா றழியல்லாஹுஅன்ஹா அவர்களை மணம் புரிந்ததனால் அவர்களது கோத்திரத்தாருக்கும் பெரும் நன்மைகள் கிடைத்தன. அன்னை ஜுவைரியா அவர்களின் கோத்திரத்தாரில் பலர் முஸ்லிம்களுக்கெதிராக தொடுத்த யுத்தத்தில் கைதிகளாக பிடிக்கப்பட்டிருந்தனர். நபியவர்கள் பெண்ணெடுத்த சமூகத்தாரை இனிமேலும் கைதிகளாக வைத்திருப்பதா என்று நினைத்த ஸஹாபாக்கள் அக்கோத்திரத்தாரின் ஒரு நூறு கைதிகளை விடுதலை செய்தார்கள். இப்பாரிய உதவி அவர்களின் உள்ளங்களில் எவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை.

நபியவர்கள் பலதார மணம் புரிந்தமைக்கு மற்றுமொரு உயர்ந்த காரணம் இருக்கிறது. என்னவென்றால், நபியவர்கள் தோன்றிய அறபுச் சமூகம் ஒழுக்கம், பண்பாடு என்பவற்றில் வீழ்ச்சியடைந்து, உயரிய கொள்கை கோட்பாடுகளற்ற, மூடப்பழக்க வழக்கங்கள் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தது. இத்தகையதொரு சமூகத்தை மாற்றியமைப்பதற்கு அச்சமூகத்திலிருந்த ஆண்களைச் சீர்திருத்துவது போன்றே பெண்களையும் சீர்திருத்த வேண்டிய கட்டாயம் நபியவர்களுக்கு இருந்தது. இஸ்லாமிய சமூக அடிப்படைக் கோட்பாட்டின் படி ஓர் ஆண் அந்நியப் பெண்ணுடன் இரண்டறக் கலந்து பழக முடியாது. எனவே, பெண்களுக்கான சட்டதிட்டங்களையும் வாழ்வியல் ஒழுங்கையும் பெண்கள் மூலமாகவே பிற பெண்களுக்கு போதிக்க வேண்டிய கட்டாயம் நபியவர்களுக்கு ஏற்பட்டது.

பெண்களுக்கிடையிலான இத்தகையதொரு மகத்தான சீர்திருத்தப் பணியை நிறைவேற்ற தகுதிவாய்ந்த, வெவ்வேறான வயதும் திறமையும் கொண்ட பெண்களை தனக்குத் துணையாக தேர்ந்தெடுத்துக்கொள்வதைத் தவிர நபியவர்களுக்கு வேறு வழி கிடையாது. அப்போதுதான் பிற பெண்களுக்கு மார்க்க சட்டங்களையும் ஒழுக்கப் பண்புகளையும் வழங்க முடியும். அப்பெண்மணிகள் நபியவர்களின் சார்பாக பெண்ணினத்திற்கு மார்க்கத்தை எடுத்துரைக்கும் பொறுப்பையும் செம்மையாக நிறைவேற்ற முடியும்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்...

## அல்ஜாமிஅதுல் கைரிய்யா மகளிர் அறபுக் கல்லூரி ஹிப்ழுப் பிரிவுக்கு புதிய மாணவிகள் அனுமதி

ஏறாவூர் புன்னக்குடா வீதியில் அமைந்துள்ள அல்ஜாமிஅதுல் கைரிய்யா மகளிர் அறபுக்கல்லூரியின் ஹிப்ழுப் பிரிவிற்கு புதிய மாணவிகள் அனுமதிக்கப்படவிருக்கின்றனர். பாடசாலைகளில் தரம் 4, 5ம் வகுப்புகளில் கல்வி கற்கின்ற மாணவிகளும் இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

தங்கள் குழந்தைகளை அல்குர்ஆனை மனனம் செய்த ஹாபிழாக்களாகக் காண விரும்பும் பெற்றோர் கல்லூரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 31. 10. 2012ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**தொடர்புகளுக்கு : அதிபர், அல்ஜாமிஅதுல் கைரிய்யா மகளிர் அறபுக் கல்லூரி, புன்னக்குடா வீதி, ஏறாவூர். 065 2241157, 077 3535367**

# ஐயமும் தெளிவும்

**ஐயம்** : துல்ஹஜ் மாதம் வந்து விட்டால் உழ்ஹிய்யா தொடர்பான சட்டதிட்டங்கள் பேசப்படும் அதே வேளை இப்றாஹீம் நபியவர்களுடன் தொர்புபட்ட சம்பவங்களும் பேசப்படுகின்றன. இச்சம்பவங்கள் ஆதாரபூர்வமானவையா? இச்சம்பவங்களோடு கற்பனைகள் கலக்கப்பட்டிருக்கின்றனவா?

**தெளிவு** : ஓரிறைக் கொள்கையை உலகம் முழுவதும் உறுதியோடு ஓங்கி ஒலித்த இறைத் தூதர்களுள் பிரதான இடத்தை வகிக்கும் நபி இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் மாபெரும் தியாகத்தை நினைவுகூரும் முகமாகத்தான் அல்லாஹ் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகமாகிய எம் மீது உழ்ஹிய்யா என்ற கடமையை விதியாக்கினான்.

ஹஜ், உம்றா வணக்கங்களின் பெரும்பாலான கிரியைகள் நபி இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களினதும் அவர்களது குடும்பத்தினரினதும் தியாகங்களை நினைவுகூருவதாகவே அமைந்துள்ளன. அதிலும் விசேடமாக உழ்ஹிய்யா என்ற வணக்கம் இப்றாஹீம் நபியவர்களினதும் அவர்களது குடும்பத்தாரினதும் தியாகத்தின் உச்சநிலையை பறைசாற்றுவதாக அமைந்திருக்கிறது.

இப்றாஹீம் நபியவர்கள் வயோதிப வயதை அடைந்த போது தனக்கு சந்ததியை அருளுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கு இஸ்மாஈல் அலைஹிஸ் ஸலாம் அவர்களை மகனாக வழங்குகிறான்.

ஒரு நாள் இப்றாஹீம் நபியவர்கள் தனது மகனை அறுத்துப் பலியிடுவதாக கனவுகாண்கிறார்கள். நபிமார்களின் கனவும் வஹியாகும் எனும் அடிப்படையில் அக்கனவை நிறைவேற்றுவதற்காக தனது மகனிடம் அபிப்பிராயம் கேட்கிறார்கள். தியாகத்தில் தந்தையை மிஞ்சிய தனயனாக பாலகர் இஸ்மாஈல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் அல்லாஹ் கட்டளையிட்டதை நிறைவேற்றுமாறு உறுதியுடன் கூறுகிறார்கள். மகனை அழைத்துக்கொண்டு இப்றாஹீம் நபியவர்கள் ஜம்றதுல் அகபா நோக்கிச் செல்லும் போது ஷைத்தான் இடைமறித்து மகனை அறுக்க வேண்டாம் என்கிறான். அவனுக்கு ஏழு கற்களை எடுத்து எறிந்துவிட்டு மீண்டும் ஜம்றதுல் வுஸ்தா நோக்கி அழைத்துச்செல்கிறார்கள். அங்கும் வழிமறித்த ஷைத்தானுக்கு ஏழு கற்களைப் பொறுக்கி எறிந்துவிட்டு, தன் மகனை அறுக்க ஆயத்தமாகிய போது, அல்லாஹ் அவர்களை அழைத்து 'நீர் உமது கனவை உண்மையாக்கி வைத்துவிட்டீர்' என்று கூறி, வானவர்கள் மூலமாக வெண்ணிற செம்மறியாட்டை அனுப்பி அதை அறுத்துப் பலியிடுமாறு கட்டளையிடுகிறான். இப்றாஹீம் நபியவர்களும் அச் செம்மறியாட்டை அல்லாஹ்வுக்காக அறுத்துப் பலியிட்டார்கள். இச்சம்பவத்தை அல்குர்ஆனில் 37 வது அத்தியாயம் 100வது வசனத்திலிருந்து 108 வரையான வசனங்களிலும் முஸ்னத் அஹ்மத் என்ற ஹதீஸ் நூலிலும் காணலாம்.

இச்சம்பவம் பல்வேறு பொய்கள், கற்பனைகள் கலந்து மிம்பர் மேடைகளிலும் பள்ளிவாசல்களுக்குள்ளும் பேசப்படுவதை அவதானிக்க முடியும். இப்றாஹீம் நபியவர்கள் தனது மகனின் கழுத்தில் கத்தியை வைத்து அறுத்ததாகவும் பல தடவைகள் முயன்றும் அறுக்கமுடியாமல் போகவே அருகிலிருந்த பாறையொன்றில் கத்தியை ஓங்கி அடித்ததாகவும் அப் பாறை இரண்டாகப் பிளந்ததாகவும் பலர் இச்சம்பவத்தை சோடித்துக் கூறுவார்கள். உண்மையில் இது ஒரு பொய்யான இடைச் செருகலாகும். நபி இப்றாஹீம், அவர்களது மகன் நபி இஸ்மாயீல் ஆகிய இரு கண்ணியமிக்க நபிமார்கள் மீதும் இட்டுக்கட்டி கூறப்படும் வார்த்தைகளாகும். இப்றாஹீம் நபி அவர்கள் அறுப்பதற்கு ஆயத்தமான போதே அல்லாஹ் அதை நிறுத்தி அதற்குப் பதிலாக செம்மறியாட்டை அனுப்பி அதை உழ்ஹிய்யா வழங்குமாறு கட்டளையிட்டான். இப்றாஹீம் நபியவர்கள் மகனை அறுத்ததுமில்லை, அருகிலிருந்த கல்லில் அடிக்கவுமில்லை, கல் இரண்டாகப் பிளக்கவுமில்லை என்பதை அல்குர்ஆன், ஹதீஸிலிருந்து தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அல்லாஹ் மிகவும் அறிந்தவன்.

**ஐயமும் தெளிவும்**

மார்க்கம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் ஐயங்களையும் எழுதி அனுப்புங்கள். அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அவற்றுக்கு பதில் அளிக்கப்படும். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி

தவ்ஹீத் ஜமாஅத்,த.பெ. இல: 02, ஏறாவூர்


ஏறாவூரில்

CGS

இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

கணனி மற்றும் மடிக்கணனி
(DESKTOP / LAPTOP)
திருத்தம் செய்தல்

உங்களது கணனி திருத்துவது சம்பந்தமான பிரச்சினையா?

சேவைகள்
01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues

இன்றே அழையுங்கள்
0772300420



CGS
College for Tech Studies
இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

இம்முறை
A/L எழுதிய
மாணவர்களுக்கான
கணனி வகுப்புக்கள்
எதிர்வரும்
செப்டம்பர் 03ம் திகதி
முதல் ஆரம்பமாகும்.

CGS இன் கணனி கற்கை நெறிகள்
* Diploma in Personal Computer Based Application Packages
* Diploma in Computer Hardware
* Diploma in Web Designing
* Diploma in Computer Networking & Administration
* Professional Diploma in AutoCAD, MEP and Architecture
* Computer for Kids

# பெறுமதியான கடிகாரப் பரிசை வென்று தரும் ஐந்து கேள்விகள்

1. துல்ஹஜ் பிறை 11, 12, 13 ஆகிய தினங்கள் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன?
2. ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் மேற்கொள்ள வேண்டிய அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான அமல் எது?
3. மார்க்கம் பூரணப்படுப்பட்டமை சம்பந்தமாக பேசும் அல்குர்ஆன் வசனம் இடம்பெறும் அத்தியாயம் எது?
4. நபியவர்களை அவமதிக்கும் வகையில் திரைப்படம் வெளியிடப்பட்ட நாடு எது?
5. நபியவர்கள் தொழுகையில் ஆறுதல் பெறும் இருப்பில் இருந்து எழும்போது எவ்வாறு எழுவார்கள்?

---

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **12.11.2012** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான புத்தகப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். விடைகளை அனுப்பும் போது தொ.பே இலக்கத்தையும் குறித்தனுப்பினால் பரிசில்களை வீடு வந்து சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும். (ஆயினும் அத் தொ. பே இலக்கங்கள் அடுத்த இதழில் வெளியிப்படமாட்டா.) அல்லது தெரிவுசெய்யப்படுவோர் 077 8088030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :

**தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

## *கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:*

**முதலாம் இடம் :** MAM. **அஸீம், காயர் வீதி, ஏறாவூர்.**

**இரண்டாம் இடம் :** AK. **பாத்திமா நாஸியா, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் - 03.**

**மூன்றாம் இடம் :** MN. **பாத்திமா றுமைசா, ஓட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் - 06.**

**பாராட்டைப் பெறுவோர்:**

1. WF. ஷுக்ரியா, புன்னைக்குடா வீதி, ஏறாவூர்.
2. MUF. றாஷிதா, புகையிரத குறுக்கு வீதி, ஏறாவூர்.

## கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள்

1. 4வது அத்தியாயம்
2. வடமத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம்
3. சுவர்க்கம்
4. அஸ்மா றழியல்லாஹுஅன்ஹா
5. ஈரான்


**மாதம் தோறும் கடிகாரப்பரிசை வழங்குவோர்**

**ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அமைந்துள்ள**

**யூரோ போன் வேர்ல்ட்**

**இல.17, பிரதான வீதி, ஏறாவூர்**

Fax: 065 2240283



> Mobile Phones
> Phone Accessories

Mobile Phone Repairing

Dialog

**மாதாந்த கட்டணப் பட்டியல் (Dialog Bill) மின்சாரப் பட்டியல் இங்கே செலுத்த முடியும்.**



**மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை (குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.**



☺ கொம்பியூட்டர் எக்ஸசரிஸ்
☺ இன்டெர்நெட் டொங்கள்
☺ அன்டி வைரஸ், கேம்ஸ் மற்றும் கொம்பியூட்டர் சொப்ட்வெயார் சிடிகள்



சகலவிதமான மொபைல் போன்கள், மொபைல் போன்களின் உதிரி பாகங்கள் என்பன உத்தரவாதத்துடனும் நியாய விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்

☺ மின்சார பட்டியல் கட்டணம் (CEB)
☺ டயலொக், எயார்டெல் பட்டியல் கட்டணம் (மொபைல், TV, இன்டெர்நெட்)
☺ மோட்டார் சைக்கில், ஆட்டோ, ஹேன் டிரக்டர் என்பவற்றிற்கான லைசன்ஸ் இன்சுரன்ஸ் (அமானா தகாபுல்)

என்பன எவ்வித கட்டண கழிவுமின்றி உடனுக்குடன் மேற் கொள்ளலாம்

R-tel COMMUNICATION

**ஏ.ஆர்.எம் ஹாஜி கட்டிடம், பிரதான வீதி ஏறாவூர் - 03.** (பழைய பொம்பே பசார் எதிரில்)

COMPUTER ACCESSORIES MOBILE PHONE & ACCESSORIES TEL: 065 22 400 33 / 077 877 22 00